# உதயன்

சுடர் : 37
கதிர் : 351

சனிக்கிழமை
12 நவம்பர் 2022

ஐப்பசி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50


## பெண் உட்பட கசிப்புடன் மூவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 12
கோப்பாய் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ஊரெழு கிழக்குப் பகுதியில் 14 லீற்றர் கசிப்புடன் பெண் உட்பட மூன்று பேர் நேற்றுக் கைது 11



# ராஜீவ் கொலை வழக்கில் ஆறு பேருக்கும் விடுதலை

## இந்திய உச்சநீதிமன்றம் நேற்று அதிரடி

சென்னை, நவம்பர் 12
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதிகளாக இருந்து வந்த நளினி, முருகன், ரவிச்சந்திரன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார், சாந்தன் ஆகிய 6 பேரையும் விடுதலை செய்து உச்ச நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது. 11



## பிள்ளையுடன் வாழ்வதற்கே உயிருடன் உள்ளேன் நான்

ராஜீவ் கொலைவழக்கில் விடுவிக்கப்பட்ட சாந்தனின் தாயார் உருக்கம்

யாழ்ப்பாணம், நவ. 12
எனது ஆசை எல்லாம் எனது பிள்ளை நல்லபடியாக என்னிடம் வந்து சேரவேண்டும் என்பதுதான். அவருடன் நான் சிறிதுகாலம் வாழவேண்டும். அதற்காகத் தான் நான் உயிருடன் இருக்கிறேன் 10



மிருசுவிலில்

## தாயும் சேயும் சடலங்களாக கிணற்றுக்குளிருந்து மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 12
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் தாயும் ஏழு மாதமேயான பெண் குழந்தையும் கிணற்றுக்குள் இருந்து சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று 10

## வசந்த முதலிகேவை விடுவிக்க உதவுக!

ஐ.நா.விடம் கோரிக்கை

கொழும்பு, நவ. 12
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேவையும், அனைத்துப் பல்கலைக்கழக பிக்கு மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கல்வெள சிறிதம்ம தேரரையும் விடுவிப்பதற்கு ஐ.நா.வின் உதவி 11

ஜனாதிபதி மாளிகையில் பணம் மீட்பு

## கோத்தா வாக்குமூலம்; நீதிமன்று உத்தரவு

கொழும்பு, நவ. 12
ஜனாதிபதி மாளிகைக்குள் 17.8 மில்லியன் ரூபா மீட்கப்பட்ட விவகாரத்தில், முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் வாக்குமூலத்தைப் பதிவுசெய்யுமாறு கோட்டை நீதிவான் திலினே கமகே நேற்று உத்தரவிட்டார். 11

யாழ்ப்பாணத்தில்

## சீரற்ற காலநிலை: 1,025 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 12
சீரற்ற காலநிலை காரணமாக, யாழ்.மாவட்டத்தில் 305 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 25 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய 10

## வடமாகாணத்தில் மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 12
வங்காள விரிகுடாவில் நிலைகொண்டுள்ள தாழமுக்கத்தின் காரணமாக வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கனமழை முதல் மிகக் கன 10

போதைப்பாவனை எதிரொலி:

## பருத்தித்துறைப் பகுதிகளில் மோப்பநாய் சகிதம் தேடுதல்

யாழ்ப்பாணம், நவ. 12
போதைப்பொருள் பாவனைகளும்கடத்தல்களும் அதிகரித்துள்ளன என்று கிடைத்த தகவலை அடுத்து பருத்தித்துறைப் பகுதியில் நேற்று மோப்ப நாய் சகிதம் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பியந்த அமர 11

சுன்னாகம் பொலிஸ் பிரிவில்

## முதியோர் வசித்த வீடொன்று தீக்கிரை

யாழ்ப்பாணம், நவ. 12
யாழ். சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏழாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் பின்னிரவில் வீடொன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. முதியோர் இருவர் வசித்துவந்த வீடே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. 10

## காணி மோசடி வழக்கில் ஒன்பது பேருக்கு மறியல்

யாழ்ப்பாணம், நவ. 12
யாழ்ப்பாணத்தில் போலி உறுதி மூலம் காணி மோசடி இடம்பெற்றதாகச் சொல்லப்படும் வழக்கில் கைதான ஒன்பது பேரையும் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதவான் திருமதி நளினி சுபாஸ்கரன் கட்டளையிட்டார்.
குறித்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள 9 சந்தேகநபர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி, மூத்த சட்டத்தரணிகள் 11

## டீசல், ம.எண்ணெய் விலை எகிறல்

கொழும்பு, நவ. 12
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் டீசல் மற்றும் மண்ணெண்ணெயின் விலையில் அதிகரிப்புச் செய்துள்ளது. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒய்வூதியம் காலதாமதம்; சீராக்குவதற்கு வேலைத்திட்டம்

## பிரதமர் தெரிவிப்பு



**கொழும்பு, நவ. 12**

**ஓய்வூதியப் பணிக்கொடையை வழங்கும்போது கடந்த காலத்தில் ஏற்பட்ட காலதாமதத்தை சரிசெய்வதற்கு வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அண்மையில் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுசார் ஆலோசனைக்கூட்டத்தில் ஓய்வூதியப் பணிக்கொடையை வழங்குவது காலதாமதமாவது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடியில் திறைசேரியால் நிதியை விடுவிப்பதிலுள்ள தாமதம் காரணமாக ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெறுவதற்கு காத்திருப்போர் பட்டியலில் அதிகளவானோர் உள்ளனர் என ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் இதன்போது தெரிவித்தார்.

மேலும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் வரையான அனைத்துக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டுள்ளன. ஜனவரி முதல் எஞ்சிய காலத்துக்குத் தேவையான நிதியை விடுவிப்பதற்கு திறைசேரி இணக்கம் தெரிவித்துள்ளது.

அதேபோன்று ஓய்வூதிய வயதை 60 வயதாகக் குறைத்தமை காரணமாக இந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியை அடுத்து புதிய விண்ணப்பங்கள் வரவுள்ளன எனவும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அதற்கமைய ஓய்வூதியப் பணிக்கொடையை வழங்கும்போது கடந்த காலத்தில் காலதாமதமாகியிருந்ததை சரிசெய்வதற்கு வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்றும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

திறைசேரியின் அனுமதியைப் பெற்று இரண்டு பகுதிகளாக இக்கொடுப்பனவுகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் தெரிவித்தார். (ச-இ)

# உலக உணவு ஸ்தாபனத்தால் 10,000 தொன் யூரியா பகிர்வு

## கமநலசேவை நிலையங்களில் விவசாயிகள் பெயர்ப்பட்டியல்

கொழும்பு, நவ. 12

ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய ஸ்தாபனம் மற்றும் உலக உணவு ஸ்தாபனம் ஆகியவை இணைந்து வறண்ட மற்றும் இடர்வலயங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 8 மாவட்டங்களைச் சேர்ந்த பொருளாதாரம் நலிவுற்ற விவசாயிகளுக்கு யூரியா உரம் பகிர்ந்தளிக்கவுள்ளது என உலக உணவு ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் உலக உணவு ஸ்தாபனம் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அநுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் மொனராகலை ஆகிய 8 மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கே 10 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இதற்கெனத் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளின் பெயர்ப்பட்டியல் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள அந்தந்த கமநல சேவை நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி 8 மாவட்டங்களிலும் தகுதியுள்ள நெற்செய்கையாளர்கள் தத்தமது கமநலசேவை நிலையத்துக்குச் சென்று தமது விவரங்கள் சேர்க்கப்பட்டுள்ளனவா? என்பதை ஆராய்ந்து உறுதிப்படுத்திக்கொள்க. விவசாயிகளின் இந்தப் பெயர்ப்பட்டியல்கள் எதிர்வரும் 18ஆம் திகதி வரை பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும். உரவிநியோகத்துக்கான திகதி உள்ளிட்ட விவரங்கள் அந்தந்த கமநல சேவை நிலையங்கள் மூலம் அறிவிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

# தெல்லிப்பழையில் திருட்டு சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணம், நவ. 12

தெல்லிப்பழை பகுதியிலுள்ள வீடொன்றில் பெறுமதியான பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் தெல்லிப்பழை குற்றத் தடுப்புப் பொலிஸாரால் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தொலைக்காட்சிப் பெட்டி, நீர் இறைக்கும் இயந்திரம் ஆகியவை திருட்டுப் போயுள்ளன என வீட்டின் உரிமையாளரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய தெல்லிப்பழை குற்றத் தடுப்புப் பொலிஸார் முன்னெடுத்த விசாரணையில் நேற்றுமுன்தினம் கட்டுவன் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய சந்தேகநபரை கைதுசெய்தனர்.

அத்துடன் அவரிடமிருந்து திருடப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த தெல்லிப்பழை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-27)



# ஊர்காவற்றுறைப் பகுதியில் கரையொதுங்கிய டொல்பின்

யாழ்ப்பாணம், நவ. 12

ஊர்காவற்றுறை பருத்தி அடைப்பிலுள்ள கடற்கரையோரத்தில் டொல்பின் மீன் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை கரையொதுங்கியது. கரையொதுங்கிய டொல்பின் மீன் இறந்த நிலையில் காணப்பட்டது என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர். அதனையடுத்து இது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கப்பட்டது. (ஓ-14,125,26)

# வவு.பொருளாதார மத்திய நிலையம் ஜனாதிபதி ரணிலால் திறக்கப்படும்

வவுனியா, நவ. 12

வடமாகாணத்துக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி பயணம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வவுனியாமதகுவைத்த குளத்தில் அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

அத்துடன் அவரின் பயணத்தின் ஒரு பகுதியாக வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்களைச் சந்திக்கவும், தெரிவு செய்யப்பட்ட சிலருடன் மாவட்டச் செயலகத்தில் அபிவிருத்திக்கூட்டத்தில் கலந்துரையாடவும் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் ஜனாதிபதி ரணிலின் வருகைக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை வவுனியா நகரில் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ஓ-14)

# சந்தைக் கட்டடத் தொகுதி நேற்று திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

நல்லூர் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட கொக்குவில் சந்தைக் கட்டடத்தொகுதி நேற்று வெள்ளிக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.

உலக வங்கியின் உள்ளூர் அபிவிருத்தித் திட்டத்தின் 10.37 மில்லியன் ரூபா பங்களிப்பு மற்றும் நல்லூர் பிரதேசசபையின் 9 மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்புடன் மொத்தமாக 19.37 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் சந்தைக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டது.

கட்டடத் தொகுதிக் கல்வெட்டை நல்லூர் பிரதேசசபையின் தவிசாளர் ப.மயூரன் திரைநீக்கம் செய்ய யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் நாடாவெட்டி சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். (ஓ-14,125)

# மீட்கப்படும் போதைப்பொருள்களை நீதிமன்றினூடாக பகுப்பாய்வு செய்க

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 12

மீட்கப்படும் உயிர்கொல்லி போதைப்பொருள்களை இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பும்போது நீதிமன்றின் ஊடாகப் போதைப்பொருள்கள் அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்படுவதே சிறந்த முறை.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கு கிழக்கில் தீவிரமாக அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனைக்குப் பின்னால் படையினரும் பொலிஸாருமே செயற்படுகின்றனர். இதுதொடர்பில் அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.

போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்ட பின்னர் அவற்றை அரச இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பும்போது உரிய சட்டமுறை பின்பற்றப்படவேண்டும். குறிப்பாக நீதிமன்றத்தின் ஊடாக குறித்த போதைப்பொருள்கள் அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்படுவது சிறந்தது. பொலிஸார் நேரடியாக அவற்றை ஆய்வுக்கு அனுப்பும் முறை இரத்துச் செய்யப்பட வேண்டும் - என்றார். (ச-22)

# யாழில் இளம் யுவதி நேற்று சடலமாக மீட்பு

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலி பகுதியில் நேற்று தூக்கில் தொங்கிய நிலையில் இளம் யுவதி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அதே பகுதியைச் சேர்ந்த 29 வயதான யுவதி ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

வீட்டிலுள்ளோர் குறித்த யுவதியின் அறையை காலையில் சென்று பார்த்தவேளை அவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இதெல்லாம் நடக்கக்கூடிய காரியமா?

'சரியான நேரத்தில் எடுக்கப்படும் பிழையான தீர்மானமும் பிழையான நேரத்தில் எடுக்கப்படும் சரியான தீர்மானமும் வெற்றியளிக்காது' என்ற அரசியல் முதுமொழி உண்டு. ஆனால், இதேவழியில்தான் பயணிப்பேன் என அடம் பிடிக்கிறார் இலங்கையின் 'அதிர்ஷ்ட' ஜனாதிபதி ரணில்.

அரசியலில் பழம் தின்று கொட்டைபோட்ட ரணிலுக்கு இப்படியெல்லாம் முடிவெடுக்கக்கூடாது என்பது தெரியாததல்ல. ஆனாலும், சில விடயங்களை இழுத்தடித்து நீர்த்துப்போகச் செய்வதற்கு அவர் பயன்படுத்தும் யுக்தியாகக் கூட இது இருக்கலாம். அடுத்த ஆண்டு சுதந்திர தினத்துக்கு முன்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்று ரணில் அறிவித்திருக்கின்றார், வரவேற்கத்தக்க அறிவிப்புத்தான். அதில் இன்னொரு விடயத்தையும் அவர் அழுத்திக் குறிப்பிட்டிருக்கின்றார். 'வெளியாரின்தலையீடு இல்லாமல் அது நிறைவேற்றப்படும்' என்பதே அது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அடுத்த ஆண்டு சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு காணமுடியும். ஆனால், அதற்குரிய அரசியல் விருப்பு தென்னிலங்கையிடம் இன்று இருக்கின்றதா? என்பதுதான் பல மில்லியன் டொலர் கேள்வி. ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப்போன்று பொருத்தமான தருணத்தில் எடுக்கப்படும் பொருத்தமான நடவடிக்கைகளே வெற்றியைப் பெற்றுத்தரும்.

நல்லாட்சி அரசின் காலத்தில் புதிய அரசமைப்பை உருவாக்க முயற்சி எடுக்கப்பட்டது. இது தொடர்பில் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் ஓர் இணக்கமும் எட்டப்பட்டிருந்தது. ஆனால், அந்த முயற்சி இழுத்தடிக்கப்பட்டது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் தரப்புக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்த முயற்சியில் தேக்கம் ஏற்பட்டது. ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வந்த சூழலில், தேர்தல் இருப்புக்காக –வாக்குக்காக – இனவாதம் கையில் எடுக்கப்பட்டதால் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி மூழ்கடிக்கப்பட்டது. புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியை, 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன் ஆரம்பித்தார்கள். அதை 100 நாள்களுக்குள் முடித்திருந்தால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தன. தேர்தலுக்கு மிக நீண்ட காலம் இருந்ததால், வாக்கு வேட்டைக்காக எவரும் எத்தனிக்காத அந்தச் சூழலில் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிக்கு கணிசமான ஆதரவு கிடைத்திருக்கும். காலம் தவறியதே அதன் தோல்விக்குக் காரணம்.

சில மாதங்களுக்கு முன்னர், மக்கள் போராட்டங்கள் ராஜபக்சக்களுக்கு எதிராக வெடித்திருந்தன. அப்போது ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பாக ராஜபக்சக்கள் மக்களிடம் முகம்கொடுக்க முடியாது முடங்கிக் கிடந்தனர். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம், 19ஆவது திருத்தச்சட்டத்தை மீண்டும் கொண்டு வருவோம் என்றெல்லாம் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமில்லாது எல்லோரும் முழங்கினர். ஆனால், நிலைமை கொஞ்சம் சுமுகமடைந்து, 22ஆவது திருத்தச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது தங்களது சுயரூபங்களை ஒவ்வொருவரும் காண்பிக்கத் தொடங்கினர். நிறைவேற்று அதிகார ஒழிப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

22ஆவது திருத்தத்துக்கே பெருமளவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கவில்லை. 22ஆவது திருத்தச் சட்டத்துக்கே இந்த நிலைமை என்றால், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும்விடயத்துக்கு இந்தநாடாளுமன்ற உறுப்பினர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பது சொல்லித் தெரிந்துகொள்ளவேண்டியதில்லை. பொருளாதார நெருக்கடி கழுத்தை நெரிக்கும் தறுவாயில், தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கியிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என்று கருத்து வெளியிட்ட தென்னிலங்கை தலைவர்கள்தான், தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் என்ன பிரச்சினை? என்று இப்போது கேட்கின்றனர்.


இந்தச் சூழலில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை ரணில் அடுத்த சுதந்திர தினத்துக்கு முன்னர் வழங்குவது என்பது மலையை கெல்லி எலியைப் பிடித்த கதைதான். சம்பந்தரின் 'அடுத்த தீபாவளிக்குள் தீர்வு 'என்பதைப் போல ரணிலின் 'அடுத்த சுதந்திர தினத்துக்குள் தீர்வு' என்பதும் இனி ஒவ்வொரு வருடமும் உச்சரிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகம்.

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2022



"கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்" —இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)




# அனைத்துக் கட்சிகளும் ஏற்கக்கூடிய சமஷ்டியே இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 12**



**அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமஷ்டியே இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையும். இதற்கு அனைத்துக் கட்சிகளையும் அழைத்து அரசாங்கம் பேச்சை ஆரம்பிக்க வேண்டும். காலம் தாழ்த்தாது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.**

இவ்வாறு நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நீதித்துறை தொடர்பான திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கை யில், இனப்பிரச்சின்னக்குத் தீர்வு காணப்போவதாக நீதி அமைச்சர் பொது வெளியில் கூறுகின்றார். இந்த எண்ணம் வரவேற்கத்தக்கது. எங்களுடைய தீர்வானது அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமஷ்டியாகவே இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி மாகாணசபைத் தேர்தலை நடத்தி மாகாணசபை முறைமையை அதிகாரத்துடன் செயற்படுத்தவேண்டும்.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பல ஆண்டுகளாக சிறையில் வாடிய 8 பேர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் அண்மையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களில் நால்வர் சட்டசிக்கல் காரணமாக தடுத்து வைக்கப் பட்ட நிலையில் மூவர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நன்றி தெரிவிக்கின்றேன். மிகுதியாகவுள்ள மற்றையவரையும் விரைவில் விடுதலை செய்ய வழிவகுக்கவேண்டும் - என்றார். (ச-22)

# பெரமுனவுடன் இனி அரசியல் உறவில்லை

## சுதந்திர மக்கள்சபை வெளிப்படை

கொழும்பு, நவ. 12

சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியுடன் இனி ஒருபோதும் அரசியல் உறவைப் புதுப்பித்துக் கொள்ளப்போவதில்லை என்று டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள்சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சபையின் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சன்ன ஜயசுமன தெரிவிக்கையில்,

தற்போதைய நாடாளுமன்றம், மக்கள் எதிர்பார்ப்பைப் பிரதிபலிக்கவில்லை. எனவே புதிய மாற்றமொன்றை மக்கள் வலியுறுத்துகின்றனர். புதியவர்களிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். மக்களின் மனநிலை என்னவென்பதை அறிவதற்கு குறைந்தபட்சம் உள்ளாட்சிசபைத் தேர்தலாவது நடத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மக்கள் போராட்டம் வெடிக்கும். தேர்தல் நடைபெற்றால் நாம் வெற்றிபெறுவோம். வெல்லும் அணியில் நாம் பிரதான பங்காளியாக இருப்போம். மொட்டுக் கட்சியுடன் இனி அரசியல் உறவு இல்லை. தேர்தலில் அவர்களுடன் போட்டியிடவும் மாட்டோம் - என்றார். (ஒ-14.44)

நாளை 13.11.2022 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி 27

சுபநேரம் : 09.07 - 10.37
ராகுகாலம்: 04.37 - 06.07

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்கு வாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். பிரமுகர்களின் அறிமுகமும் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபட வேண்டி இருக்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உறவுகளால் பண வரவுக்கு வாய்ப்புண்டு. செலவுகள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். சகோதரர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். செரிமானப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** புதிய முயற்சிளைப் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்தநாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

### பொலிஸாருக்கு எதிராக
## கடந்த 5 வருடங்களில் 9,295 முறைப்பாடுகள்

கொழும்பு, நவ. 12
இலங்கை பொலிஸாருக்கு எதிராக கடந்த 5 வருடங்களில் 9 ஆயிரத்து 295 முறைப்பாடுகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்த முறைப்பாடுகளில் சட்டவிரோத கைது, பொய் வழக்குகள், தாக்குதல், சித்திரவதை, பாரபட்சம், அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் பொலிஸாரின் செயலற்ற தன்மை ஆகியவை அடங்குகின்றன. (ச-இ)

## சுற்றுலா விசா மூலம் தொழில் வாய்ப்புகள்
### இன்றுமுதல் இடைநிறுத்தம்

கொழும்பு, நவ. 12
சுற்றுலா விசா மூலம் வீட்டு வேலை மற்றும் திறன் சாரா துறைகளில் தொழிலுக்காகப் பெண்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதை இன்றுமுதல் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இதனை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது. இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் சுற்றுலா விசா மூலம் தொழில்வாய்ப்புக்காக சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த 586 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.
மேலும் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளுக்கு சுற்றுலா விசா மூலம் சென்றவர்களில் சிலர் தொழிலின்றி நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேலும் தெரிவித்தது. (ச-இ)

## பஸ் சேவை நடைமுறையால் மாற்றுத்திறனாளிகள் சிரமம்
### நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணத்தின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் சேவைகளை மேற்கொள்ளும் பஸ்கள் பயணிகளை புதிய பஸ் தரிப்பிடத்தில் இறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
கடந்த 8ஆம் திகதி முதல் தனியார் பஸ்கள் புதிய பஸ் நிலையத்தில் இருந்து சேவைகளை முன்னெடுக்கின்றன. ஆயினும் யாழ்ப்பாணத்தின் பிற பகுதிகளில் இருந்து சேவைகளில் ஈடுபடும் பஸ்கள் பயணிகளை யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் முன்னர் இறக்கும் அதே இடங்களில் இறக்குகின்றன.
இதனால் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர் வேறு இடங்களுக்கான பஸ்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பிரதானமாக விழிப்புலன் அற்றவர்கள் ஒரு பஸ்ஸில் இருந்து இறங்கி இன்னொரு பஸ்ஸில் ஏறுவதற்கு மிகுந்த சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.
இதைக் கருத்திற் கொண்டு யாழ்ப்பாணத்தின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் சேவைகளை மேற்கொள்ளும் பஸ்கள் பயணிகளை புதிய பஸ் தரிப்பிடத்தில் இறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)



## வீட்டுத்தோட்ட பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், நவ. 12
வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் வட்டார அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 56 பயனாளிகளுக்கு சுயபொருளாதாரத்தை ஊக்குவிக்குமுகமாக, வீட்டுத்தோட்டம் தொடர்பான பயிற்சிப்பட்டறை பிரதேசசபையின் பிரதான மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.
அதனைத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வீட்டுத் தோட்ட உபகரணங்களும், நாற்று விதைகளும் பிரதேச சபையினால் வழங்கப்பட்டது.
வலி.தென்மேற்கு பிரதேசசபையின் பெண் உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட மூலோபாய உதவித்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான வீட்டுத்தோட்டம் தொடர்பான பயிற்சிப்பட்டறை மற்றும் உபகரணங்கள், விதைகள் வழங்கப்பட்டன. (ஒ-14,125)

## கொடுப்பனவு வழங்கல்

சாவகச்சேரி, நவ. 12
தென்மராட்சிப் பிரதேச பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் மற்றும் நோய்களால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான நவம்பர் மாத கொடுப்பனவு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்பட்டு வருகின்றது.
கொடுப்பனவுகளை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை முதியோர் மற்றும் விசேட தேவையுடையோருக்கான ஒக்ரோபர், நவம்பர் மாதங்களுக்குரிய கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,9)

## சூழகம் அமைப்பால் உணவுப்பொருள்கள்

யாழ்ப்பாணம், நவ. 12
சூழகம் அமைப்பின் ஏற்பாட்டில் மானிப்பாய் நவாலிப் பகுதியில் பொருண்மியம் நலிந்த தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு 23 ஆயிரம் பெறுமதிமிக்க உலருணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன. சூழலியல் மேம்பாடு அமைவனத்தின் ( சூழகம் ) போசகர் கலாநிதி.அகிலன் முத்துக்குமாரசுவாமியின் பிறந்த தினத்தை முன்னிட்டு இந்தக உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ஒ-14)



மட்டுவில் கிழக்கு வில்சன் சனசமூக நிலைய முதியோர்தின விழா சனசமூக நிலையத் தலைவர் சி.அமிர்தலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.
நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய தொழில் மேம்பாட்டு கல்வி அபிவிருத்தி அதிகாரி க. ஈஸ்வரன் கலந்துகொண்டு முதியோரைப் பாராட்டி கௌரவித்து, நினைவுப் பரிசில்களை வழங்கினார். (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு தினத்தை முன்னிட்டு பரிசோதனையும் கருத்தரங்கும்

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். நீரிழிவுக் கழகத்தால் நீரிழிவுப் பரிசோதனை முகாமும் நீரிழிவு விழிப்பூட்டல் கருத்தரங்கும் இடம்பெறவுள்ளது. அதன்படி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 7 மணிக்கு யாழ்.போதனா மருத்துவமனையில் நீரிழிவு பரிசோதனை முகாம் மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

காலை 7.30 மணிக்கு யாழ்.போதனா மருத்துவமனையிலிருந்து கச்சேரி வரை நீரிழிவு விழிப்பூட்டல் நடைபவனி இடம்பெறும். எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொமர்ஷல் வங்கிக்கு முன்னால் இயங்கிய மருத்துவமனை வீதியில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இலவச நீரிழிவுப் பரிசோதனை முகாம் இடம்பெறவுள்ளது. இதில் நீரிழிவுப் பரிசோதனை, குருதி அழுத்த பரிசோதனை, உடல் திணிவுச் சுட்டிப் பரிசோதனை, நீரிழிவு தொடர்பான அறிவுரைகள் என்பவற்றுடன் கண்பரிசோதித்து வாசிப்புக் கண்ணாடியும் இலவசமாக வழங்கப்படவுள்ளது. அத்துடன் எதிர்வரும் புதன்கிழமை யாழ்.போதனா மருத்துவமனை நீரிழிவு சிகிச்சை நிலையமும் யாழ்.நீரிழிவுக் கழகமும் இணைந்து நடத்தும் நீரிழிவு விழிப்பூட்டல் கருத்தரங்கு கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்லூரி மாணவர்களுக்கு மட்டும் இடம்பெறவுள்ளது என்று யாழ். நீரிழிவுக் கழகம் தெரிவித்துள்ளது. (ஒ-14)



கமநல சேவைகள் நிலையத்தின் ஏற்பாட்டில், சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க ளரிபொருள் நிலையத்தில் விவசாயிகளுக்கு 5 லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் நேற்று வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்பட்டது. (ஒ-14-9)

# கௌரவிப்பு

தென்மராட்சி, நவ.12

கைதடி, நலன் பேணும் நட்புறவுக்கழகத்தினர் கைதடி நட்புறவுக்கழகம் கனடா மற்றும் புலம்பெயர்ந்த உறவுகளின் அனுசரணையில் கைதடி முதியவர்களை கௌரவிக்கும் நிகழ்வு மேற்கு அன்னை இரத்தினம் மணிமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. கழகத்தின் தலைவர் சி.நிசாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் "மூத்தோர் எங்கள் முதுசம்" என்னும் தொனிப்பொருளில் முதியவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ய)


## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம் ரவுண், பிரபல **புத்தகசாலைக்கு காசாளர், உதவி விற்பனையாளர்** உடன் தேவை.

077 663 9304, 072 287 5625

## காணி விற்பனைக்கு உண்டு


2 பரப்புக் காணி கோப்பாய் கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில் விற்பனைக்கு உண்டு. 077806 2062

(CS 21787) 93/6)


## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை

**பிறப்பு : 20.03.1943** **இறப்பு : 11.11.2022**



உசனை பிறப்பிடமாகவும் நீர்வேலி கந்தசாமி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை, கணபதிப்பிள்ளை (முன்னைநாள் எழுதுவினைஞர் ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி) நேற்று (11.11.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சங்கரப்பிள்ளை நாகமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி இராமலிங்கம் இலட்சுமி தம்பதியரின் மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், பிரசாந்தி (கொழும்பு), கோபிராஜ் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, சரவணமுத்து மற்றும் சரஸ்வதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், ஆத்மிரா, அகானா, நித்ரா, நிவின் ஆகியோரின் அன்புப் பேரனும், பிரதீபன், காயத்திரி ஆகியோரின் மாமாவும், காலஞ்சென்ற நீர்வை - பொன்னையாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணியளவில் நீர்வேலி தியாக்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 899 3649 (மருமகன்)**
**077 361 7139 (மகள்)**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 21798) 1-6

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான
## கேள்வி கோரல் - 2023

01. வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2022.11.14 – 2022.11.28 நண்பகல் 12.00 மணி**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2022.11.29 பி.ப.14.30 மணிவரை**
**கேள்வி திறக்கும் திகதி : 2022.11.29 பி.ப.14.30 மணி**

02. கேள்விகோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்
03. விலைக்கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப்பட்டியலில் இடம்பெறாமல் இருத்தல் வேண்டும்.
04. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும் அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் சேவை வழங்குனர் தெரிவில் இவ் விடயம் முக்கியமாக கருத்திற் கொள்ளப்படும்.
05. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம் வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரத்தில் மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப.14.00மணி வரை மீளளிக்க முடியாத கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 2.500.00 இனையும் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு பணமாக ரூபா 10.000.00 இனையும் பணமாக செலுத்துவதன்பேரில் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து "தவிசாளர் வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம்" என்ற முகவரிக்கு அரக்குமுத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப் பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு இணைப் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி **உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத் தபால் முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக்கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
07. கேள்வி திறக்கப்படும்போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்கமுடியும்.
08. கேள்விகோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்விகோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள் கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
09. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
10. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| பெறுகை இலக்கம் | சேவை விபரம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| NP/14/41(17)/01/IV/PC/23 | பாதுகாப்பு சேவை | 06 | 02 | 2023.01.01-2023.12.31 |

12.11.2022

**த.நடனேந்திரன்**
**உள்ளூராட்சி பெறுகைக்குழு,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.**

(CR 38490)(3/6)


## பணிப்பெண் தேவை

யாழ். நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு பணிப் பெண் தேவை.

077 327 6502


## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 03 . 1920 — மறைவு 10 . 11 . 2022



### திருமதி நாகம்மா விநாயகமூர்த்தி

அராலி தெற்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா விநாயகமூர்த்தி அவர்கள் கடந்த (10.11.2022) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து கைலாயம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், கனகரத்தினம் மற்றும் ஆறுமுகம், சண்முகராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.11.2022) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

களவத்துறை வீதி, அராலி தெற்கு.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
03 - 03 - 1945



இறப்பு
09 - 11 - 2022

# கதிரவேலு தியாகராஜா

கச்சேரி நல்லூரைப் பிறப்பிடமாகவும் V.H. லேன் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு தியாகராஜா கடந்த (09.11.2022) புதன்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் முத்துப்பிள்ளை கதிரவேலு தம்பதிகளின் அன்பு மகனும், சீதாலட்சுமி சின்னத்துரை தம்பதிகளின் மருமகனும், இராசமணியின் (சந்திரா) அன்புக் கணவரும், கிருஸ்ணராசா (கனடா), கீதாஞ்சலி (இருபாலை), தேவராசா (கிளிநொச்சி கச்சேரி), பிரியதர்சினி (கொழும்பு), குகராசா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகராசா, தர்மகுலசிங்கம், கணேசலிங்கம், இராசலிங்கம், லீலாவதி, ரதிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லமான V.H.லேன் இருபாலையில் நடைபெற்று பூதவுடல் செக்கடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நரசிங்க வைரவர் கோவிலடி,**
**V.H. லேன் இருபாலை,**
**கோப்பாய்.**


**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(CR38486) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் வீராட் விஸ்வப் ப்ரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



மலர்வு 26.06.1952

உதிர்வு 08.11.2022

## சுப்பிரமணியம் பத்தர் நடராஜா

யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் இலண்டனை வாழ்விடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பத்தர் நடராஜா அவர்கள் கடந்த (08.11.2022) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சுப்பிரமணியம் - சரஸ்வதி அவர்களின் பாசமிகு மகனும், திருமதி பிறேமாவதி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி குமாரசாமி, பேபி அவர்களின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம், செல்வராஜா, மற்றும் செல்வராணி, அன்னராணி, பவளராணி, கமலராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பியசேனா, ஜெயசேகரா மற்றும் சூரியகலா, தவஜோதி, சரஸ்வதி, காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் விஸ்வகுமார், பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், செந்தூரன், காண்டீபன், திலீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நீலுஜா, துளசி, நிடிஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சந்திரகுமாரி, லதாகுமாரி, பகீரதன், கீதாகுமாரி, றஜிதாகுமாரி, யசிந்தன், நவீந்திரன், கஜேந்திரன், பார்த்தீபன், சுரேஷ், வினோஷா, உஷானா, நிமாலா, தனுராஜ் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், சந்திரஜெயந்தி, இந்திரஜெயந்தி, சந்திரகுமார், காலஞ்சென்ற இந்திரகுமார், சூரியஜெயந்தி, காலஞ்சென்றவர்களான ஜெயக்குமார், சாந்தகுமார் மற்றும் ராஜ்குமார், கவிதா, நகுலன், விஷ்ணுஜன், கவிவர்ஷன், பாலகிருஷ்ணன், காலஞ்சென்ற முரளிகிருஷ்ணன் மற்றும் கிருஷ்ணலதா, கிருஷ்ணராஜ், சாம்பவி, சைந்தவி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஷேய்ஷன், ஜஷ்ணா, ஷ்ரேஅன்ஜா, ஆறிஜன், அமாஜா, ருத்ரன், ஜறா, தவறிஷ், கஷ்மீரா, றஷ்மிகா, வஷ்மிகா, சாய்ஷா, அபிஷன், அஷ்மிரா, ஆரத்தியா, ஹரிஸ்ராம், அனிஷ்ராம், லக்ஷகி, ஜஸ்வின், சஷ்விகா, அக்ஷயன், நிலுக்ஷன், திருஷ்யன், ஷஷ்வின், துளசி, மதுஷன், சதீஷன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**'ஸ்ரீரங்கம்'**
**கேணியடி வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CS 21791) (3/6)

## Chundikuli Girls' College Jaffna

### New Admissions - 2023
### English Medium Nursery

- For 3+ Calsses (Girls only)
- Only limited Vacancies
  Age : Born on or after 01.02.2019 and before 31.01.2020
- Applications close on 16th December 2022.
- Application forms (limited number) will be available at the College office from 14th November 2020.
- Interviews will be held soon after the submission of the applications.

(CR 38477) (3/6)

**Principal**

## நல்லூர் பிரதேச சபை
## வழங்குநர்களை பதிவு செய்தல் 2023

சபையானது 2023 ம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**01. பொருட்கள்**

1.2 காகிதாதி எழுதுபொருட்கள்
1.2. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
1.3. சித்த மருத்துவ மருந்துகள்
1.4. நூலகங்களுக்கான நூல்கள்
1.5. துணி வகைகள்
1.6. கட்டட பொருட்கள் (சீமெந்து ஓடுகள் கம்பிவகைகள்)
1.7. கற்கள் மணல்
1.8. தீந்தை வகைகள் (Paints) நிறம் தீட்டும் பொருட்கள்
1.9. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
1.10. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
1.11. மின்வழங்கு பொருட்கள், மின்பாவனை பொருட்கள்
1.12. எரிபொருட்கள் உராய்வு நீக்கி
1.13. இரும்பு பொருட்கள்
1.14. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
1.15. பனைமரங்கள், சலாகைகள்
1.16. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின்கலங்கள்
1.17. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
1.18. சுத்திகரிப்பு பொருட்கள், கிருமிநாசினிகள்
1.19. பாதணிகள், தோற்பொருட்கள், மழை அங்கிகள்
1.20. அலங்காரப் பொருட்கள்
1.21. இலத்திரனியல் பொருட்கள்

**02. சேவைகள்**

2.1. அச்சிடுதல், பதாகைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல்கள் கட்டுதல்
2.2. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்துதல்
2.3. வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல்
2.4. ஒட்டுவேலைகள், உலோகவேலைகள்
2.5. கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்
2.6. மின்சாதனங்கள் திருத்தம், மீள மின் வலுவூட்டல்
2.7. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
2.8. வாகனங்கள் சுத்திகரிப்பு
2.9. கோலவுடை தைத்தல்
2.10. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
2.11. இறப்பர் முத்திரை தயாரித்தல்
2.12. வீதி விளக்குகள் பொருத்துதல்
2.13. மயானங்களில் இறந்த உடல்களை எரியூட்டல்
2.14. வீதி, கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலை
2.15. கழிவகற்றல் சேவை (Gully emptier service)
2.16. சுத்திகரிப்பு சேவை
2.17. திண்மக்கழிவு தரம் பிரித்தல்
2.18. வீதியோரம், வடிகால் பராமரிப்பு சேவை

பதிவின் பொருட்டு வியாபாரப்பெயர்ப்பதிவுச் சான்றிதழின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பொருட்கள் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக் கிளையில் 14.11.2022 ம் திகதியிலிருந்து 15.12.2022 ம் திகதி வரை அலுவலக நேரத்தில் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 (வரிகள் நீங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2023" எனக் குறிப்பிட்டு நேரடியாகவோ / பதிவுத்தபால் மூலமோ **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, இல. 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில்** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப **படிவங்கள் 16.12.2022 ம் திகதி மு.ப 11.00 மணி** வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு **021-222-2700** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**13.11.2022**

**ப.மயூரன்**
**தவிசாளர்**
**நல்லூர் பிரதேச சபை**

(CR 38488) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கலாபூஷணம் நாகேந்திரர் லட்சுமணராசா

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ். பரவைக்குளம் திருநெல்வேலியை வதிவிடமாகவும் தற்போது நெடுந்தீவில் வசித்தவருமான கலாபூஷணம் நாகேந்திரர் லட்சுமணராசா மூத்த ஊடகவியலாளர். எழுத்தாளர். கவிஞர். தொல்பொருட் திணைக்கள முன்னாள் அலுவலர். அவர்கள் 10.11.2022 வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நாகேந்திரர் (முன்னாள் நெடுந்தீவு கிராமசபைத் தலைவர். கொடிவேலி விதானையார்) செல்லம்மா நாகேந்திரர் (இலங்கையின் முதலாவது பெண் கிராமசபைத் தலைவி - நெடுந்தீவு கிராமசபை) ஆகியோரின் அன்பு மகனும். சரவணமுத்து இராசேந்திரம் (விதானையார் புங்குடுதீவு) பூபதி இராசேந்திரம் ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற கௌரி (ஆசிரியை) யின் அன்புக் கணவரும். காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (விதானையார்) அமிர்தரட்ணராஜா (இளைப்பாறிய பாடசாலை அதிபர் அடம்பன் (கனடா). இராமநாதன் ( பாலசிங்கம் பொறியியலாளர் லண்டன்). செல்வரத்தினம் (எழுதுவினைஞர்). இராஜேஸ்வரி (ஆசிரியை கனடா) மற்றும் நவயோகம் (இளைப் பாறிய ஆசிரியை லண்டன் ). நாகேஸ்வரி இளைப்பாறிய ஆசிரியை நெடுந்தீவு) இராமச்சந்திரன் (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் நெடுந்தீவு ) ஆகியோரின் பாசமிகு சகோதரரும். காலஞ்சென்றவர்களான சற்குணம்.அமிர்தம் மற்றும் அன்னலட்சுமி (கனடா). ஞானாம்பிகை (லண்டன்). யோகம்மா (ரத்தினம் ஆசிரியை லண்டன்) மற்றும் காலஞ்சென்றவர்களான கந்தையா (விதானையார்). சுவாமிநாதன் நாகபூசணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (13.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணியளவில். 30/1 நீக்கிலஸ் ஒழுங்கை.கச்சேரிநல்லூர் வீதி. யாழ்ப்பாணம். எனும் முகவரியில் நடைபெற்று செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தொடர்பு:**
**அ.பொன்னம்பலம் : 076 372 6826**
**கு.உதயவேணி (ரஜனி): 077 134 9443**
**க.கேதீஸ்வரன் : 077 659 2424.**

(CS 21794) (3/6)

**தகவல் :**
**பெறாமக்கள்.**

TAPROBANE SEAFOODS

## தப்ரபேன்
## கடலுணவுதனியார் நிறுவனம்
## சமூக ஈடுபாடு

| | |
|---|---|
| பொருள் : சமூக ஈடுபாடு | பக்க எண் : 01 of 01 |
| மறு ஆய்வுத் திகதி : - | திருத்த எண் : 00 |
| வெளியீட்டுத் திகதி : 01. 11. 2022 | வெளியீட்டு எண் : 01 |

| | |
|---|---|
| **தலைப்பு :** | தப்ரபேன் கடலுணவுகள் நிறுவனத்தின் சமூகக் கலந்துரையாடல் |
| **திகதி :** | 26.11.2022 |
| **இடம் :** | எருக்கலம்பிட்டி வளாகம் ,மன்னார் |
| **பங்கேற்பாளர்கள் :** | தப்ரபேன் நிறுவன நிர்வாகக்குழு |

### சமூக ஈடுபாடு – நிகழ்ச்சி நிரல்

**நோக்கம்**

- மேம்படுத்தப்பட்ட புரிதல் - சமூக ஈடுபாட்டின் முக்கியத்துவத்தையும், நிறுவனங்கள் ஏன் சமூக ஈடுபாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதனையும் பல்வேறுபட்ட தளங்களினூடாக சமூகத்துடன் தொடர்பு கொள்ளுதல்.
- ஈடுபாட்டைச் செயற்படுத்துதல் - சமூக உறுப்பினர்களை நிறுவனத்துடன் இணைந்து செயற்படும் வகையில் ஊக்குவித்தல், ஈடுபாடு காட்டுவதில் ஏற்படக்கூடிய தடைகளை குறைத்தல், சமூகத்துடன் இணைந்து செயற்படுவதற்கான நிச்சய வாய்ப்புக்களை உருவாக்குதல் நிறுவனத்தை செயற்படுத்தும் செயல்முறைகள் மற்றும் அமைப்புக்களை எதிர்காலத்தில் நிறுவுதல்.

**நிகழ்ச்சி நிரல்**


எங்கள் கலந்துரையாடலின் போது பின்வரும் தலைப்புக்கள் பற்றி விவாதிக்க விரும்புகின்றோம்.

| இல. | நிகழ்ச்சிநிரல் |
|---|---|
| 1. | அறிமுகம். |
| 2. | சமூகத்தில் தப்ரபேன் நிறுவனத்தினால் ஏற்பட்டுள்ள மாற்றம். |
| 3. | நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த இறால் வளர்ப்பின் நவீன தொழிநுட்பம். |

வேறு ஏதாவது பிரச்சினைகள் / சிக்கல்கள் இருப்பின் அவற்றை நீங்கள் தெரியப்படுத்துவதன் மூலம் கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ள முடியும்.

தொடர்புகொள்ள வேண்டிய நபர் : திரு. டோல்டன் டியோனியஸ்
தொலைபேசி இல : 0773767915
மின்னஞ்சல் : daryin90@gmail.com

# கண்ணீர் அஞ்சலி



## அமரர்
## சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை

பிறப்பு 20.03.1943 — இறப்பு 11.11.2022

நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்
கண்ணிமைக்கும் நேரத்தில்
காலனுமைக் கவர்ந்து சென்றதேனோ?
கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்

**பிரிவால் வாடும்**
**பேரன் மற்றும் குடும்பத்தினர்**

**தொடர்புக்கு :**
**0773319118,0778993649**

(CS 21795)(3/6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளைக் கட்டுப்படுத்த அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம்

## கிளி.மாவட்டச் செயலர் வேண்டுகோள்

**கிளிநொச்சி,, நவ. 12**

**தற்போது இளம் சமூகத்தினர் மத்தியில் அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் மிக அவசியமானது என்று கிளிநொச்சி மாவட்டச்செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

போதைப்பொருள் பாவனையை தடுப்பது தொடர்பான மாவட்ட மட்ட கலந்துரையாடல் மாவட்டச் செயலர் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்றது.

இதில் உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமது மாவட்டத்தில் மட்டுமன்றி நாடு முழுவதும் தற்போது போதைப்பொருள் பாவனையால் இளைய சமூகம் அழிவடைந்து வருகின்றது. இந்த போதைப் பொருள் பாவனைகளை சட்டத்தால் மட்டுமோ அல்லது அதிகாரிகள் மட்டத்திலான செயற்பாடுகள் மூலமோ கட்டுப்படுத்த முடியாது.

கிளிநொச்சி மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துக் காணப்படுவதுடன் அதன் பின்னால் பல்வேறுபட்ட பிரச்சினைகள் உருவாகின்றன. அதாவது இளவயது திருமணங்கள், இளவயதுக் கர்ப்பம், குடும்ப வன்முறைகள் என சமூகப் பிறழ்வான நடத்தைகள் போதைப்பொருள் பாவனையால் இடம்பெறுகின்றன.

எனவே, பிரதேசசெயலக மற்றும் கிராமமட்ட அமைப்புகளை வலுப்படுத்தி போதைப்பொருள் பாவனைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வுகளை மேற்கொள்வதுடன் அவற்றை இனங்கண்டு அதற்கான தீர்வுகளையும் முன்னெடுக்கவேண்டும்.

அத்துடன் பாடசாலை மட்டங்களிலோ அல்லது கிராம மட்டங்களிலோ போதைப்பொருள் பாவனை மற்றும் அதனால் ஏற்படுகின்ற பாதிப்புகள் தொடர்பில் அடையாளம் கண்டு அனைத்துத் துறை சார்ந்தவர்களும் அவற்றை ஒருங்கிணைந்து கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ஒ-14-316)

# மாணவி மீது தாக்குதல் ஆசிரியர் கைது!

கொழும்பு, நவ. 12

அம்பாந்தோட்டையிலுள்ள புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகிவரும் மாணவி ஒருவரை கொடூரமாகத் தாக்கிய குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று அம்பாந்தோட்டை ஹுங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலையில் வைத்து மாணவி கொடூரமாகத் தாக்கப்பட்டார் என்று மாணவியின் தாயார் ஹுங்கம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபரான ஆசிரியர் கைது செய்யப்பட்டார் என்றும், சந்தேகநபரான ஆசிரியர் மாணவியின் வகுப்பாசிரியர் என்றும் ஹுங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் ஆசிரியரால் தாக்கப்பட்ட மாணவி, தற்போது தங்காலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-14-இ)

# லாப்ஸ் எரிவாயு சிலிண்டர் சட்டவிரோதமாக சேகரிப்பு

## சட்டநடவடிக்கை எடுக்கப்படும் லாப்ஸ் நிறுவனம் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 12

லாப்ஸ் எரிவாயு நிறுவனத்துக்குச் சொந்தமான எரிவாயு சிலிண்டர்களை சட்டவிரோதமாகச் சேகரிப்போருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என லாப்ஸ் எரிவாயு நிறுவனம் எச்சரித்துள்ளது. லாப்ஸ் எரிவாயு நிறுவனத்துக்குச் சொந்தமான எரிவாயு சிலிண்டர்களை சட்டவிரோதமாகச் சேகரிக்கும் குற்றவாளிகள் தொடர்பில் கண்டறியப்பட்டுள்ளது. லாப்ஸ் எரிவாயு சிலிண்டர்கள் நிறுவனத்தின் சொத்து. உத்தியோகபூர்வ அனுமதியின்றி சிலிண்டரை சேகரிக்கவோ, விற்கவோ, விநியோகிக்கவோ அல்லது தோற்றத்தை மாற்றவோ முடியாது. பாதிக்கப்பட்டோர் இதுபோன்ற சட்டவிரோதச் செயல்கள் குறித்து அறிந்தால் 1345க்கு அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்கவும் என அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# கைதடி மருத்துவமனையில் நீரிழிவு வாரம் கடைப்பிடிப்பு

சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு கைதடி சித்த போதனா மருத்துவமனையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை 14ஆம் திகதி முதல் எதிர்வரும் 21ஆம் திகதி வரை நீரிழிவு விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இதன்போது நீரிழிவு நோய் பற்றிய கருத்துரைகள், நீரிழிவு நோயாளர்களுக்கான உணவு முறைகள், அவற்றின் அளவு, மூலிகைகளின் பயன்பாடு ஆகியவை குறித்த விளக்கங்கள், நீரிழிவு நோயாளர்களுக்கான யோகாசன மூச்சுப் பயிற்சி வழிகாட்டல்கள், குருதிப் பரிசோதனை ஆகியவை இடம்பெறவுள்ளன என மருத்துவமனை பொறுப்பதிகாரி மருத்துவர் ஐ.ஜெபநாம கணேசன் தெரிவித்தார். (ச-இ)

# வெள்ளம் வடிந்தோட வெட்டிய குழியில் வீழ்ந்து பலர் காயம்!

சாவகச்சேரி, நவ.12

வீதியில் வெள்ளம் வடிந்தோட வெட்டிய குழியில் வீழ்ந்து பாடசாலை மாணவிகள் உள்ளிட்ட பலர் நேற்றுக் காயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரி வடக்கு வட்டாரத்திலுள்ள முதலாம் மைல் வீதி, கடந்த 2020 ஆம் ஆண்டு தார்க்கலவை வீதியாகப் புனரமைக்கப்பட்டது. கடந்த வருடம் பெய்த மழையின்போது அந்தப் பகுதியிலுள்ள பல காணிகளில் வெள்ளம் தேங்கி நின்றதால் புதிதாக அமைக்கப்பட்ட தார்க்கலவை வீதியின் ஒருபக்கம் வெட்டப்பட்டு வெள்ளம் வெளியேற்றப்பட்டது. வெள்ளம் வடிந்தோடியதும் வெட்டப்பட்ட பகுதிக் குழிக்குள் பழைய கற்கள், மணல் போன்றவற்றைப் போட்டு நிரப்பி மக்கள் போக்குவரத்தை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு முதல் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வரை பெய்த கனமழையால் வெள்ளம் அதிகரித்து தற்காலிகமாகப் போடப்பட்ட கற்கள்,மணல் என்பன வெள்ளத்தால் அள்ளிச் செல்லப்பட்டன. இதை அவதானிக்காமல் நேற்றுக்காலை சந்தைக்குப் பொருள்களுடன் வந்தவர்களும் சைக்கிள்களில் வந்த மாணவிகளும் குழியில் வீழ்ந்து காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-[illegible])

# நூல்கள் வெளியீடு

வவுனியா, நவ. 12

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையில் இளைய தம்பி தருமபாலன் தொகுத்த "நாயன்மார்களின் வரலாறும் சமயச்சான்றோரின் வழிபாடுகள்", "திருவாசகம்", "சைவசமய ஆலய வழிபாட்டு அருள் அமுதம்" ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா, வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெறவுள்ள விழாவில், நூல் அறிமுக உரையை கலாசார உத்தியோகத்தர் சிவ.கஜேந்திரகுமார் ஆற்றவுள்ளார். அதனைத்தொடர்ந்து நூலின் முதற்பிரதியை வேப்பங்குளம் ஞானவைரவர் அறங்காவலர் பொ.நாகேந்திரம் பெற்றுக்கொள்ளவுள்ளார். (ஒ-14)

# எனது கணவர் இராணுவத்தினரிடம் சரணடைந்தமைக்கு நானே சாட்சி!

## அனந்தி சசிதரன் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 12

இராணுவத்தினரிடம் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எவரும் சரணடையவில்லை என அரசால் கூறப்படுவது முழுப்பூசணிக்காயை சோற்றினுள் மறைக்கும் செயலாகும். இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினரான எழிலனின் மனைவியும் வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினருமான அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

இறுதிப்போரில் விடுதலைப்புலிகள் சரணடையவில்லை என இராணுவம் தெரிவித்துள்ளமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே தானே சாட்சி என அனந்தி சசிதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2009ஆம் ஆண்டு மே 18 திகதி எனது கணவர் எழிலன் உள்ளிட்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப்புடன் சென்று இராணுவத்தினரிடம் சரணடைந்ததை நானே நேரில் கண்டேன். முட்கம்பிகளுக்கு இந்தப் பக்கம் நாங்களும் அந்தப் பக்கம் அவர்களுமாகக் காணப்பட்டோம். அங்கு நின்ற பஸ்களை நோக்கி எழிலன் உள்ளிட்டவர்களை இராணுவத்தினர் அழைத்துக் கொண்டு செல்வதை நான் பார்த்தேன்.

இராணுவ உயர் அதிகாரிகளே அவர்களை அழைத்துச் சென்றார்கள்.

இதனை நானே நேரில் கண்ட சாட்சியாக நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருந்தேன்.

நான் மட்டுமன்றி எத்தனையோ தாய்மாரும் மனைவிமார்களும் இராணுவத்திடம் தங்கள் உறவுகளைத் தாங்களே கையளித்துள்ளனர்.

இப்படியிருக்கும்போது, தங்கள் கண் முன்னாலேயே இராணுவத்திடம் பலர் சரணடைந்தமையை அவர்கள் பார்த்துள்ள நிலையில் எவரும் சரணடையவில்லை எனக் கூறப்படுவது பொய்யாகும் - என்றார். (ச-22)

# 'சைவநாதம்' மலருக்கு ஆக்கங்கள் கோரல்

அகில இலங்கை சைவப்புலவர் சங்க வைர விழாவை முன்னிட்டு 'சைவநாதம்' மலரு[illegible] ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. ஆக்கங்கள் [illegible] பக்கங்களுக்கு மேற்படாது இருப்பதுடன் மு[illegible]தாக சைவநாதத்தில் வெளிவந்த தலைப்புக்க[illegible] அமையக்கூடாது என்று அறிவிக்கப்பட்டுள்[illegible] அனைத்து சைவப்புலவர்களும் உ[illegible] துணை நூல் விவரங்களையும் இணை[illegible] saivappulavarsangam1960@gmail.com [illegible] சங்கத்தின் மின்னஞ்சலுக்கு எதிர்வரும் 20 [illegible] திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் அ[illegible] வைக்குமாறு தலைவர் சைவப்புலவர் சி.கா.[illegible] நாதன் அறிவித்துள்ளார். (ஒ-14-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையுடன்...

இவ்வாறு தெரிவித்தார் ராஜீவ் கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டுள்ள சாந்தனின் தாயார்.

ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதிகளாக இருந்துவரும் நளினி, முருகன், ரவிச்சந்திரன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார், சாந்தன் ஆகிய 6 பேரையும் விடுதலை செய்து உச்ச நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், உடுப்பிட்டியில் வசித்து வரும் சாந்தனின் தாயார் மேலும் தெரிவிக்கையில்:

30 வருடங்களாக கோவில், குளம் என திரிந்து முன்வைத்தவேண்டுதல்களுக்கு இன்று பலன் கிடைத்துள்ளது. எனது மகன் விடுதலையாவதற்கு காரணமான அனைவருக்கும் நன்றி.

பேரறிவாளனை விடுதலை செய்ததில் இருந்து எனக்கு பெரும் மன வருத்தமாக இருந்தது. எனது பிள்ளையை எப்போது விடுதலை செய்வார்கள் என்று ஏக்கமாக இருந்தது. அது இப்போது தான் நிறைவேறியது. எனது உடல்நிலை சரியில்லை. இல்லையென்றால் நான் சென்று எனது பிள்ளையை அழைத்து வருவேன். எனது ஆசை எல்லாம் எனது பிள்ளை நல்லபடியாக என்னிடம் வந்து சேரவேண்டும் என்பதுதான். அவருடன் நான் சிறிது காலம் வாழவேண்டும். அதற்காகத்தான் நான் உயிருடன் இருக்கிறேன்' - என்றார். (அ-ம-22)

## தாயும்...

வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. பிரகாஷ் சந்திரமதி (வயது - 40) என்ற தாயும் அவரது ஏழு மாதமேயான பெண் குழந்தையான பிரகாஷ் காருண்யா ஆகியோரேசடலங்களாக மீட்கப்பட்டனர். சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி அ.ஜூட்சன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பணித்தார்.

உயிரிழந்த பெண்ணுக்கும் அவருடைய கணவனுக்கும் இடையே வாய்த்தர்க்கம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவித்துள்ள பொலிஸார், இறப்பில் சந்தேகம் வெளியிட்டு சந்தேகநபராக குறித்த கணவனைக் கைது செய்திருந்தனர். அவர் பொலிஸாரல் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். (அ-ம-26-159-125-27-131)

## சீரற்ற...

உதவிப் பணிப்பாளர் டி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சீரற்ற காலநிலை காரணமாக யாழ். மாவட்டத்தில் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது. பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் 174 குடும்பங்களைச் சேர்ந்த 584 பேரும், யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 80 பேரும், மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 62 பேரும், கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 7 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். பொலிகண்டி பொது நோக்கு மண்டபத்தில் நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டு 14 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் - என்றார். (அ-ம-26-20)

## முதியோர்...

நீண்டகாலப் பகைமை காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று தெரிவித்துள்ள பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். வீடு தீக்கிரையான தருணத்தில், முதியவர்கள் இருவரும் அயல் வீட்டுக்குச் சென்றிருந்தனர். தீயினால் வீட்டின் ஒரு அறை முற்றாகச் சேதமடைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-20-27)

## டீசல்...

ஒரு லீற்றர் டீசல் 15 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, புதிய விலை 430 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 25 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, புதிய விலை 365 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும், சுப்பர் டீசல் மற்றும் பெற்றோலின் விலைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை. (அ-ம)

## வடமாகாணத்தில்...

மழைக்கு வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிவிப்பில்;

வங்காள விரிகுடாவில் நிலை கொண்டிருந்த தாழமுக்கம் வடக்கு, வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து குடத்தனைக்கு நேரே கிழக்காக 112 கி.மீ. தொலைவில் வங்காள விரிகுடாவில் நிலை கொண்டுள்ளது. இது மேற்குத் திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய நிலையில் இது யாழ்ப்பாணத்தின் வடக்குப் பகுதியை ஊடறுத்து நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயினும் இதனால் எமக்குப் பாதிப்பு கிடையாது. ஆனால், வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கனமானது முதல் மிகக் கனமழை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை தொடர வாய்ப்புள்ளது -என்றுள்ளது. (அ-ம)

ஓம் வீராட் விஸ்வப் ப்ரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

மலர்வு 25 - 10 - 1969



உதிர்வு 08 - 11 - 2022

## சுப்பிரமணியம் சாந்தா

மாசியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் (இரண்டாயிரம்) சாந்தா கடந்த (08.11.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் இராசமணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற தங்கராணி ரஞ்சிதம் (கனடா), வரேந்திரன் (ஜேர்மன்), புவனேந்திரன் (ஜேர்மன்), கமலாதேவி (கல்பனா - சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தங்கராசா (மாசியப்பிட்டி), கருணாதேவி (ஜேர்மன்), மாலினி (ஜேர்மன்), இளங்கோ (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும், சுரேந்திரன் (கனடா), லதா (லண்டன்), கயேந்திரன் (கனடா), தயேந்திரன் (கனடா), கோபிராஜ் (கனடா), கபில்ராஜ் (கனடா), மதிராஜ் (கனடா) ஆகியோரின் சிறிய தாயாரும், அருந்ததி, அருள்கிருஷ்ணா, ஆனந்தி, சபீனா ஆகியோரின் மாமியாரும், ஆதவன், அபி ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொட்டுபனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாசியப்பிட்டி சந்தி, சண்டிலிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்பு: ரஞ்சி (சகோதரி): 074 313 4736**

(CS 21772) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 12 . 1958



மறைவு 11 . 11 . 2022

## செல்லத்துரை மிரியம்

பாசையூர் இல.25 முதலாம் குறுக்குத்தெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மிரியம் நேற்று (11.11.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை திரேசம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான பாலேந்திரா, குலசிங்கம், தனிநாயகம், மற்றும் மாணிக்கசிங்கம், யூக்கிறிஸ்ரின் பிளசம் (ஓய்வுநிலை ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிலா, ரதி, காலஞ்சென்ற ஜெயலின் ஆகியோரின் அன்பு மைத்துனியும் நளாயினி, தமிழினியன், அபிராமி, சாவித்திரி, காலஞ்சென்ற மகிழினி ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஸ்ரபோர்ட், நத்தாசா, சித்திராங்கன், ஆரோன், ஆருசா, ஆரணவர்மன், அனந்திக்கா ஆகியோரின் ஆருயிர் மிரியம் அம்மாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை திருப்பலி இன்று (12.11.2022) சனிக்கிழமை பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் பி.ப 3.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**0212220476**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் பொலிஸ் பிரிவில்
# காணாமற் போயிருந்த சிறுமி மீட்கப்பட்டார்!

யாழ்ப்பாணம், நவ. 12

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், கடந்த இரு தினங்களுக்கு முன்னர் காணாமற் போயுள்ளார் என்று முறைப்பாடு செய்யப்பட்ட சிறுமி நேற்று முன்தினம் பின்னிரவு கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

சிறுமியின் குடும்பத்தவர்களால் நேற்று முன்தினம் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இந்த முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் பின்னிரவு அந்தச் சிறுமி பலாலி வீதியிலுள்ள கோண்டாவில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான சாலைக்கு அருகில் தனிமையில் நின்றபோது மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)

# உயிர்கொல்லி ஹெரோய்ன்: இருவர் நேற்றுக் கைதாகினர்

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ்ப்பாணத்தின் இளவாலை மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து முறையே ஒரு கிராம் மற்றும் 40 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது.

இளவாலை பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 40 மில்லிகிராம் ஹெரோய்னுடன் 25 வயதான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர் கோண்டாவில் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ஒரு கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது. கைதான இருவரும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். (அ-ம-125)

### வசந்த...

கோரப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்திடம், விசேட மனுவொன்றை நேற்றுக் கையளித்த பின்னரே, போராட்டக்காரர்கள் ஐ.நா.வின் தலையீட்டைக் கோரியுள்ளனர்.

போராட்டக்காரர்களால் கையளிக்கப்பட்ட மனுவை, ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் நேரில்வந்து பெற்றுக்கொண்டார். இது முக்கியமான விடயமாகக் கருதப்படுகின்றது.

கொழும்பிலுள்ள ஐ.நா. கிளை அலுவலகம் முன் போராட்டங்கள் இடம்பெறுவது வழமை. மனுக்களும் கையளிக்கப்படும். அவற்றை அங்குள்ள அதிகாரிகளே பெற்றுக்கொள்வர். நேற்று பிரதானியே நேரில் களமிறங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

போராட்டக்காரர்களின் வருகையை அடுத்து, ஐ.நா.கிளைஅலுவலகம்அமைந்திருந்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். எனினும், ஐ.நா. அதிகாரியின் அறிவுறுத்தலை அடுத்து பாதுகாப்புத் தரப்பு அங்கிருந்து வெளியேறியது என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

மனுவைக் கையளித்த பின்னர் போராட்டக்காரர்கள், ஐ.நா. அலுவலகம் முன்பாக சத்தியாக்கிரக போராட்டத்திலும் ஈடுபட்டனர். இதன்போது பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. (அ-ம-44)

### பருத்தித்துறைப்...

சிங்க தலைமையிலான குழுவினரே இந்தச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பருத்தித்துறைச் சந்தை, பருத்தித்துறை முச்சக்கர வண்டித் தரப்பிடம், மந்திகைச் சந்தை, பருத்தித்துறை மருத்துவமனை வீதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் என்பவற்றில் இந்தச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.



எனினும் இந்தச் சோதனையின்போது சந்தேகநபர்கள் எவரும் கைதாகவில்லை என்பதுடன், சான்றுப்பொருள்களும் கைப்பற்றப்படவில்லை. எதிர்காலத்திலும் இவ்வாறான சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-ம-26)

### ராஜீவ்...

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருந்த 7 பேரில் ஒருவரான பேரறிவாளனை கடந்த மே மாதம் 18ஆம் திகதி உச்ச நீதிமன்றம் விடுதலை செய்து உத்தரவிட்டது. உச்ச நீதிமன்றம் இந்திய சட்டப்பிரிவுகளின் அடிப்படையில் தனக்கிருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தியே பேரறிவாளனின் விடுதலைக்கு வழிகோலியது. பேரறிவாளன் விடுதலையைத் தொடர்ந்து ஏற்பட்ட சட்ட வழிவகைகளைப் பயன்படுத்தி தம்மையும் விடுவிக்குமாறு கடந்த ஓகஸ்ட் மாதம் நளினி மற்றும் ரவிச்சந்திரன் இருவரும் தனித்தனியே உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர். மேலும், இந்த வழக்கில் தங்களை விடுதலை செய்யும் வரை தங்களுக்கு இடைக்கால பிணை வழங்க வேண்டும் எனவும் மனுவில் கோரியிருந்தனர்.

இந்த வழக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வு முன் நேற்று விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் சிறையில் இருந்துவரும், 6 பேரின் நன்னடத்தை குறித்து தமிழக அரசும், மனுதாரர்கள் தரப்பிலும் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சிறையில் இந்த 6 பேரின் நன்னடத்தையைக் கருத்திற்கொண்டு, நளினி, முருகன் உள்ளிட்ட 6 பேரையும் விடுதலை செய்து நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். இந்த வழக்கில் இருந்து ஏற்கனவே விடுதலை செய்யப்பட்ட பேரறிவாளனைப் போலவே இந்த 6 பேரும் நிவாரணங்களைப் பெற தகுதியானவர்கள் என்று நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

**இருவர் மட்டும் ஏன் மேன்முறையீடு?**

'பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இதர ஆறு பேர் சிறையில் இருந்தபோதிலும் நளினி, ரவிச்சந்திரன் இருவர் மட்டுமே மேன்முறையீடு செய்திருந்தனர். ஏன் ஏனைய நால்வரும் மேன்முறையீடு செய்யவில்லை?' என்பதான கேள்வி சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் பேசுபொருளாகியுள்ளது. அவர்கள் இருவரும் மேன்முறையீடு செய்தாலும் அது தாம் இருவர் சார்ந்ததாக மட்டுமல்லாமல் ஆறு பேருக்குமான விடுதலையை வலியுறுத்திய மேன்முறையீடாகவே அமைந்தது. ஒருவேளை ஆறு பேரும் மேன்முறையீடு செய்து அது உச்சநீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டால் அது இவர்கள் ஆறு பேரும் சட்டப்போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கான கதவுகளை அடைத்துவிடும். நளினி மற்றும் ரவிச்சந்திரனின் மேன்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டாலும் ஏனைய நால்வரும் மேன்முறையீடுகளை மேற்கொள்ளலாம். ஆதலால்தான் அவர்கள் இருவர் மட்டும் மேன் முறையீடு செய்தனர் என்று சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம)

### காணி...

உட்பட 20 க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் முன்னிலையாகி முன்வைத்த பிணை விண்ணப்பம் மீது எதிர்வரும் நவம்பர் 21ஆம் திகதி கட்டளை வழங்கப்படும் என மன்று தவணையிட்டது.

யாழ்ப்பாணம் மாநகரில் அராலி வீதி பொம்மைவெளிப் பகுதியில் உள்ள காணி ஒன்றின் உரிமையாளர்களான தம்பதியர் இறந்த பின்னர், அவர்களின் போலிக் கையொப்பங்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட உறுதியால் மோசடியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக யாழ்ப்பாணம் சிறப்புக் குற்ற விசாரணைப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை நடத்திய பொலிஸார், கடந்த மாதம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்கைத் தொடுத்து சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்து மன்றில் முற்படுத்தினர். பொலிஸாரின் புலன்விசாரணைகள் நிறைவடையாத நிலையில் சந்தேகநபர் கடந்த ஒரு மாதமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்குடன் தொடர்புடைய உறுதியை நிறைவேற்றிய நொத்தாரிசான சட்டத்தரணி ஒருவரும் மற்றைய சந்தேகநபரான யாழ்ப்பாணம் பிரபல கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி கையூட்டு குற்றச்சாட்டில் சிக்கிக்கொண்டு பதவியில் இடைநிறுத்தப்பட்ட ஒருவரும் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் உட்பட வழக்கில் குற்றஞ்சுமத்தப்பட்ட 9 சந்தேகநபர்களும் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

விசாரணைகள் தொடர்பில் மன்றில் மேலதிக அறிக்கையைச் சமர்ப்பித்த யாழ்ப்பாணம் சிறப்புக் குற்ற விசாரணைப் பிரிவினர், புலன் விசாரணைகள் நிறைவடையாத நிலையில் சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்க விண்ணப்பம் செய்தனர்.

சந்தேகநபர்கள் 9 பேர் சார்பிலும் முன்னிலையான சட்டத்தரணிகள் பிணை விண்ணப்பத்தை முன்வைத்து நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தனர். 'இந்த வழக்கில் உள்ள 9 சந்தேகநபர்களும் பிணை வழங்கப்படும்போது புலன் விசாரணைகளுக்கு தடையோ இடையூறோ ஏற்படுத்தமாட்டார்கள். இந்த வழக்கின் புலன் விசாரணைகளை முன்னெடுத்து குற்றச்சாட்டுக்களை முன்வைக்க சட்ட மா அதிபரின் ஆலோசனை பெறப்படவேண்டும். அந்தப் படிமுறைகளை முன்னெடுக்க நீண்ட காலமாகும். அதனால் சந்தேகநபர்களை பிணையில் விடுவிக்கவேண்டும்' என்ற சாரப்பட நீண்ட சமர்ப்பணத்தை சட்டத்தரணிகள் முன்வைத்தனர். இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்து எதிர்வரும் 21ஆம் திகதி கட்டளை வழங்கப்படும் என்று தவணையிட்ட மன்று அன்று வரை சந்தேகநபர்கள் 9 பேரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (அ-ம-26)

### பெண்...

செய்யப்பட்டுள்ளனர். கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையிலேயே மேற்படி கைது இடம்பெற்றுள்ளது. கைதான பெண் 46 வயதுடையவர். அவர் 13 லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்து விற்பனை செய்தார். 38 வயதான நபர் ஒருவரும் 72 வயதான முதியவர் ஒருவரும் இந்த சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் கசிப்பைக் கொள்வனவு செய்து உடைமையில் வைத்திருந்தவர்கள். மூவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26-27-125)

### கோத்தா...

ஜூலை மாதம் 9ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக நாடெங்கிலும் போராட்டங்கள் வெடித்தன. கோத்தாபய ராஜபக்ச நாட்டைவிட்டுத் தப்பியோடினார். இதையடுத்து ஜனாதிபதி மாளிகையும் ஆர்ப்பாட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டது. மாளிகைக்குள் இருந்து 17.8 மில்லியன் ரூபா பணம் மீட்கப்பட்டது. அந்தப் பணம் தொடர்பான வழக்கின் விசாரணைகள் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, இந்த விடயம் தொடர்பில் கோத்தாபயவிடம் வாக்குமூலம் பதிவுசெய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்த பொதுக்கூட்டம்

வட்டுக்கோட்டை, நவ. 12

வட்டு.மூளாய் றோட் ஐக்கிய நாணய சங்கத்தின் 90 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம், வட்டுக்கோட்டையிலுள்ள சங்கக் காரியாலய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சங்கத் தலைவர் த. நாராயணன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் சங்கத்தின் பல முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(ஒ-14)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், நவ. 12

காரைநகர் அபிவிருத்திச் சபையின் பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சைவமகாசபை, மணற்காடு காரைநகரில் இடம்பெறவுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்ற பொதுக்கூட்டம் வரை இணைந்து கொண்ட அனைத்து அங்கத்தவர்களையும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு காரைநகர் அபிவிருத்திச் சபையின் செயலாளர் சுப்பிரமணியன் செந்தூரன் அறிவித்துள்ளார்.

(ஒ-14)

## கூலிஆள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் விவசாயப் பண்ணை ஒன்றில் வேலை செய்ய கூலி ஆள்கள் தேவை.
விவசாயம், தோட்ட வேலைகளில் அனுபவமுள்ள ஆண் / பெண் கூலி ஆள்கள்தேவை.
வயது : 25 - 60

(CR 38452) (3/6) **076 287 8655**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980 ஆம் ஆண்டு சதய நட்சத்திரத்தில் பிறந்த சகல வசதிகளுடைய Accounts Assistant ஆக பணி புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

(CS 47534) (3/6) தொடர்பு: **077 287 3312**

## வேலையாட்கள் தேவை

பின்வரும் வேலைகளிற்கு உடனடியாக வேலையாட்கள் தேவை.

❖ **தங்கி நின்று வேலை செய்வதற்கு**
வயது (18 - 35) ஆண்கள் மட்டும்

❖ **விற்பனை பிரதிநிதி**
வயது (18 - 35) ஆண்கள் / பெண்கள்


ஆர்வமுள்ளவர்கள் திங்கட்கிழமை (14.11.2022) தொடக்கம் வியாழக்கிழமை (17.11.2022) வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிக்குள் சுயவிபரக்கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

**விநாயகர் ஸ்ரோஸ்**
424, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
077 419 5015

(CS 47562) (3/6)

# மரண அறிவித்தல்

ஓம் வீராட் விஸ்வப் ப்ரம்மனே நமஹ



தோற்றம் 14 . 09 . 1957

மறைவு 08 . 11 . 2022

## திரு. சின்னத்துரை மௌலேஸ்வரன்

வவுனியா முதலாம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும் இந்தியா திருவான்மியூரை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சின்னத்துரை மௌலேஸ்வரன் அவர்கள் கடந்த (08.11.2022) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும், இந்திரகுமாரியின் அன்புக் கணவரும், ரிஷாந்தன் (பிரான்ஸ்), தார்மிகன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவபாதசுந்தரம், மகேஸ்வரன், நகுலேஸ்வரன் (ஓய்வுநிலை ஆசிரியர்), சிவகௌரி (அவுஸ்திரேலியா), விஜயகுமார் (பிரான்ஸ்), சிவறதி (ஆசிரியர் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), சிவமணி (ஜேர்மனி), சிவகுமார் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற லவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் வசந்தகுமாரி, சாந்தகுமாரி (பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சூரியகுமாரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல. 71/ 1A, 1ஆம் குறுக்குத் தெரு, வவுனியாவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் இறம்பைக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

0776131564

(CS 1053) (3/6)

## வேலையாட்கள் தேவை

அரசடி வீதி, நல்லூரில் இயங்கும் ஷாய்றா சுப்பர் மார்க்கட்டுக்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

(CS 47594) (3/6)

**078 500 2635, 077 269 2779**

## பணியாளர் தேவை

யாழ். மாவட்டத்தில் உள்ள கடைகளுக்கு விற்பனைப் பெண்கள் தேவை.
**தகுதி :** G.C.E. O/L அல்லது A/L
தகவல் தொடர்பு கணினி மற்றும் ஆங்கில மொழியில் அடிப்படை அறிவு.
**வயது :** 18 -35
விண்ணப்பத்துடன் உங்கள் புகைப்படத்தை இணைக்கவும்.
**info@ourfarmers.lk** (மின்னஞ்சல் விண்ணப்பங்கள் மாத்திரம் பரிசீலிக்கப்படும்)

(CS 21788) (3/6)

## யாழ்ப்பாணத்தில் உள்ள பண்ணைக்கு மேலாளர் தேவை

தகுதி :
வேளாண்மையில் உயர் படிப்பு மற்றும் வேளாண்-பயிற்றுவிப்பாளராக அல்லது வேளாண்மை விரிவு ரையாளராக பணி அனுபவம் குறைந்தது 10 ஆண்டுகள்
வயது : 45-65
முன்னுரிமை :
ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பத்துடன் உங்கள் புகைப்படத்தை இணைக்கவும்.
**info@ourfarmers.lk**
(மின்னஞ்சல் விண்ணப்பங்கள் மாத்திரம் பரிசீலிக்கப்படும்)

(CS 21789) (3/6)

## வீடு வாடகைக்குண்டு

யாழ். ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளியில் முற்றிலும் நவீன மயப்படுத்திய வீட்டில் 3 அறைகள் A/C, இரண்டு சாதாரண அறை, பாதுகாப்பு, கமரா மற்றும் இரண்டு வாகனம் நிறுத்தக்கூடிய வாகன தரிப்பிட வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
(மாத வாடகை : 60,000/- 70,000/-)

(CS21786) (3/6) **076 176 5177**

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு.

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்:-

- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்
**077 814 7389**
**077 986 5457**

# முதலாம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம் 18 - 01 - 1951

மறைவு 24 - 10 - 2021

## அமரர் திருச்செல்வம் சிவஞானவடிவாம்பாள் (காந்தி)

**திதி : சங்கடகர சதுர்த்தி**

ஆண்டு ஒன்று முடிந்ததுவோ உங்கள்
அன்பு முகம் நீங்கி சென்று
ஆறுதல் இன்றி தவிக்கின்றோம் ஆறவில்லை - அம்மா
மருமக்களுக்கு இன்னுமொரு தாயாய் இருந்து
வாழ வழி செய்தீரே
என் வளர்ச்சி காணாது எங்கு சென்றீர் - அம்மம்மா
நாம் தேடிவரும் அப்பம்மா
அரவணைக்க நீங்கள் இல்லையே
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

நீங்காத நினைவுடன்
குடும்பத்தினர்

(CS 21784) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.